**செய்தி வெளியீடு எண்: 505** **நாள்: 15.07.2020**

<u>செய்திவெளியீடு</u>

**“வேளாண் தொழில்முனைவோர், பண்ணை மற்றும் பண்ணைசாரா வேலைவாய்ப்புகளை ஒருங்கிணைத்து மதிப்புக் கூட்டுதல் மற்றும் வேளாண் பதனீட்டு தொழில் முனைவு”** குறித்த கருத்தாய்வுக் கூட்டம் காணொளிவாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 15.07.2020 அன்று காலை 10.30 மணிக்கு மனித மேம்பாட்டு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை– 5ல் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு உறுப்பினர்–செயலர் திரு.அனில் மேஷ்ராம், இஆப., துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுனர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கும், தொழில் பல்வகைப்படுத்துதல் மூலம் விவசாயிகளுக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கும் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்வதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் ஆகும். வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் ஆகியவற்றுக்கு தீர்வுகாண, தேசிய மற்றும் மாநில அரசுகளில் முக்கிய கவனத்தில், வேளாண் துறையில் தொழில் முனைவு நிறுவனங்கள் மற்றும் குறிப்பாக வேளாண்பதனீட்டு துறையில் மதிப்பு கூட்டு முறையிலான நிறுவனங்கள் விளங்குகிறது. வேளாண் மற்றும் வேளாண்பதனீட்டு தொழில்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**